25th March 1961]

இல்லை. ஸ்காலர்ஷிப் மத்திய அரசாங்கத்தில் இருந்து கொடுப்பது. அதில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படாமல் குழப்பம் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றி விசாரித்துப் பார்த்துத் தான் சொல்லவேண்டும்.

Commissioners, Panchayat Union Councils, North Arcot (complaints)

* 1087 *Q.*—**Sri S. M. ANNAMALAI:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்களிடமிருந்து கமிஷனர்கள் ஒத்துழைக்கவில்லை என்ற புகார்கள் வந்தன?

(இ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) From one Chairman of the Panchayat Union Council.

(*b*) The matter is under consideration.

Madurai Siddha Vaidya Herbal Research Institute (aid)

* 1088 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலம் விற்பது, பண உதவியளித்தல் ஆகியவை சம்பந்தமாக மதுரை சித்தவைத்திய மூலிகை ஆராய்ச்சிக் கழகத்தார் 1961-ம் ௵ ஜனவரி௴ 25௳ அனுப்பிய மகஜர் ஒன்று அரசினருக்குக் கிடைத்ததா?

(இ) அப்படியானால், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration of the Government.

Water-supply (Mettupalayam Municipality)

* 1089 *Q.*—Sri T. S. RAMASWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any scheme for water-supply to the Mettupalayam Municipality has been sanctioned by the Government;

(*b*) if so, the cost thereof;

(*c*) the relative contribution by the Municipality and the Government;

(*d*) whether there is any proposal to extend this scheme to the adjoining panchayats; and

(*e*) if so, the details thereof?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir

(*b*) Rupees 18·14 lakhs.

[25th March 1961

(*c*) The Government have decided to give a loan of Rs. 8·75 lakhs and a grant of Rs. 9·39 lakhs to the Mettupalayam Municipality.

(*d*) Yes.

(*e*) The Government have sanctioned a Comprehensive Scheme of improvements to provide water-supply to Mettupalayam Municipality and Karamadai Panchayat. The capital cost of the scheme for the Karamadai Panchayat is Rs. 1·46 lakhs and Government have decided to give this amount as loan.

SRI T. S. RAMASWAMY : May I know when this work will be taken up?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think it is under progress, Sir.

College education (Postal tuition and evening classes)

* 1090 *Q.*—**SRI A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் தபால் மூலம் அல்லது மாலை நேரங்களில் கல்லூரிப் படிப்புக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்படுமா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) This is a matter for the University to consider.

SRI A. VEDARATHNAM: பிற மாகாணங்களிலெல்லாம் இம்மாதிரி கல்வி வசதிகள் செய்து கொடுக்கிறார்களே? இதேபோன்று நம்முடைய மாநிலத்திலும் தபால் மூலம் இந்தக் கல்லூரிப் படிப்பு பெறுவதற்கு வசதி செய்தால், இங்குள்ள உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கும், ஏனையோர்களுக்கும் பெரிய அனுகூலமாக இருக்குமே? நம்முடைய அரசாங்கம் இதை யோசித்து அவர்களுக்கு யோசனை கூறுவதற்கோ அல்லது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கோ இடம் இல்லையா?

THE HON. SRI C. SUBRAMANIAM : தபால் மூலம் படிப்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. கல்லூரிக்குப் போய் படித்தாலே போதுமான அளவு படிப்பின் தரம் உயரவில்லை என்கின்ற கருத்து இருக்கும்பொழுது, தபால் மூலம் படித்தால் எவ்வளவு தரம் உயரும் என்பதுபற்றி பல்வேறு பேர்கள் பலவிதமாக நினைக்கிறார்கள். ஆகையினாலே இதில் சர்க்கார் ஒன்றும் நடவடிக்கை எடுப்பதாக உத்தேசம் இல்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, தபால் மூலம் படிப்பது என்ற முறையிலே மாலை நேரப்படிப்பு என்பதும் சேர்த்து இணைக்கப்பட்டிருப்பதினால், தபால் மூலம் படிப்பதானாலும் மாலை நேரத்தில்தான் படிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய கருத்தா? (சிரிப்பு)

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டம் அமுலுக்கு வாராமல் இருக்கும்பொழுது, அந்தத் திட்டமா, இந்தத் திட்டமா என்று கேட்பது புரியவில்லை. தபால் மூலம் படிப்பதாயிருந்தாலும் சரி, மாலை நேரத்தில் படிப்பதாயிருந்தாலும் சரி,